1979 எப்ரல் 11]

மைகள் இன்னும் இருக்கின்றன. அமைதியாக நூலைப் படிக்க வருகிறார்கள். அப்படி அவர்கள் இருக்கும்பொழுது ''அத்தானின் முத்தங்கள் அத்தனையும் முத்துக்கள்'' என்ற பாடல் பாடப்படுமேயானால் அவர்களுடைய மனோநிலை எப்படிப் பாதிக்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்கள். எனவே, உடனடியாக அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கூடுமானவரைக்கும் அந்த நூலக நேரங்களில் அங்கே வந்து படிக்கின்றவர்களுக்கு இடையூறு ஏற்படாதவண்ணம் வானொலிப் பெட்டிகள் நூலகங்களில் இயக்கப்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய கருத்து.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கான வானொலிப் பெட்டிகளை அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் தங்கள் இல்லங்களிலே வைத்திருப்பதாக அரசு அறியுமா ? அதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படி அவர்கள் செய்து கொண்டிருப்பார்களேயானால் இந்தக் கேள்வி கேட்டவர்களுக்கு ஒரு திருப்திகரமான நிலைமையிருப்பதாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமையிருக்கும். எனவே, நூலகங்களில் வானொலிப் பெட்டி இல்லை என்றால் நூலகங்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்பது நம்முடைய கருத்து. மற்ற விவரங்களை இந்தக் கேள்வியை அந்தத் துறையைச் சேர்ந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

பொதுத் தேர்வில் வெற்றி பெறாத மாணவர்கள்.

* வினா எண் 685—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978 மார்ச் தேர்வில் 11ஆம் வகுப்பில் தேர்வு பெறாத மாணவர்கள் + 2 ஆம் வகுப்புகளில் முதலாண்டில் சேர அனுமதிக்கப்படுகின்றனரா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான விதி முறைகள் ஏதேனும் உண்டா ?

[1979 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) ஆம். பள்ளியில் முறையாக 11 ஆம் வகுப்பு வரை பயின்று, எஸ்.எஸ். எல்.சி. பொதுத் தேர்வு எழுதி, தேர்ச்சி பெறாதவர்கள், பிளஸ் 2ல் மேல் நிலைக் கல்வி முதலாம் ஆண்டில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 11 ஆம் வகுப்பில் தேர்வு பெறாத மாணவர்கள் பிளஸ் 2 வகுப்பில் சேரும் போது, அவர்கள் மார்க் குறைவாக எடுத்திருக்கிறார்கள். ஆகவே சேர்க்க முடியாது என்று சொல்லுகின்ற நிலைமை தவிர்க்கப்பட்டு அனைவரும் சேர்க்கப்பட வேண்டுமென்று விதிமுறைகள் இயற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த 11 வது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. அல்லது வேறு எஸ்.எஸ்.எல்.சி. ஆக இருந்தாலும் பள்ளியில் படித்து எழுதியவர்கள் ஒரு பிரிவினர் இருக்கிறார்கள், பள்ளியில் படிக்காமல் நேரிடையாக எழுதியவர்கள்—பிரைவேட் ஸ்டடியினர் ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். அந்த பிரைவேட் ஸடடியில் படித்து எழுதியவர்களைத்தான் சேர்க்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறதே தவிர மற்றபடி ஒழுங்காக பள்ளியில் படித்து 11 ஆம் வகுப்பு தேர்வு அடையாதவர்கள் சேருகின்ற நிலைமை ஏற்பட்டால், பள்ளியில் இடம் இருந்தால், பிளஸ் 2 மேல் நிலைக் கல்வி முதலாம் ஆண்டில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்பொழுது பொறியியல் கல்லூரியில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பி.யூ.சி.யில் மேற்கொண்ட மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்பொழுது புதிதாக ஹையர் செகண்டரி கொண்டு வந்த பிறகு எந்த அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ? குறிப்பாக பி.யூ.சி. யில் தனியாக அதற்கென்று குரூப்புகள் இருக்கின்றன. ஆனால் ஹையர் செகண்டரியில் இல்லை என்ற காரணத்தால், எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். அதற்கு யூனிவர்சிடி கமிஷன் அனுமதி வழங்கியிருக்கிறதா என்றும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 12 ஆம் வகுப்பு ஹையர் செகண்டரியிலே படித்தவர்கள் கல்லூரிகளிலே பட்டப்படிப்பு படிக்கச் சேர்வதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதிலே எந்தவிதமான சிரமமும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 11]

திரு. வி. கே. ராஜு: தலைவர் அவர்களே, 11 ஆம் வகுப்பு தேர்வு பெறாத மாணவர்களை பிளஸ் 2 வகுப்பில் முதல் ஆண்டில் பள்ளியில் சேர அனுமதிப்பது போல், 10 ஆம் வகுப்பு தேராதவர்களை அதே 10 ஆம் வகுப்பில் பள்ளியில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யும் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படி 10 ஆம் வகுப்பு படித்தவர்களையும் சேர்க்க ஆரம்பித்தால் பள்ளிகளில் இடம் இல்லாத பிரச்னை அதிகமாகிவிடும். அப்படிச் சேர்க்கக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் கம்பார்ட்மெண்டல் சிஸ்டம் கொண்டு வந்து இருக்கிறோம். அதன்படி மாணவர்கள் தவறிய பாடங்களை மட்டும் எழுதி தேர்வு பெற்று 11 ஆம் வகுப்பில் சேரலாம். அதனால் இப்படிப்பட்ட நிலைமைகள் எழ இடம் இல்லை.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பிளஸ் 2 படிப்பை கல்லூரிப் படிப்பாக ஏற்றுக் கொள்கிறோமா அல்லது பள்ளிப்படிப்பாக ஏற்றுக் கொள் கிறோமா? கல்லூரிப் படிப்பாக ஏற்றுக் கொள்கிறோம் என்றால் செமஸ்டர் முறையைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிப் படிப்பாகத்தான் இப்பொழுது வைத்திருக்கிறோம். அதிலே செமஸ்டர் சிஸ்டம் கொண்டு வருவது இந்தத் திட்டத்திலே இருக்கக் கூடிய சில பணிகள். அதிலே இருக்கக்கூடிய நன்மை தீமைகளை எண்ணிப் பார்த்த பிறகுதான் இதைக் கொண்டு வருவது என்றால் கொண்டு வர முடியும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்ஜினீயரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவைகளில் பி.யூ.சி. படித்த பிறகுதான் சேர முடியும். ஹையர் செகண்டரி படித்த பிறகு நேரிடையாக அந்தக் கல்லூரிகளில் சேரமுடியுமா? அதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி படித்த பிறகு கல்லூரிகளில், இன்ஜினீயரிங் கல்லூரியாக இருந்தாலும் சரி, மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, கலைக் கல்லூரியாக இருந்தாலும் சரி, சேர்வதற்கான முறையிலேதான் திட்டங்கள் தீட்டப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.